[5th September 1959

Sri K. SATTANATHA KARAYALAR : திட்டமிட்டதில் தனியார் முதலீடு செய்ய முன் வரும்போது அதற்கு வெளி உதவி ஏதாவது கிடைத்திருக்கும் அல்லவா ? அப்படி கிடைத்திருக்குமானுல் அப்படி கிடைத்தது, எந்த அளவு என்பது சர்க்காருக்குத் தெரியுமா ?

The Hon. Sri R. VENKATARAMAN : அது இந்த சர்க்காருக்குத் தெரியாது. மத்திய சர்க்காருக்குத்தான் தெரியும்.

Weavers' Colonies in Tirunelveli and Kanyakumari districts

* 104 *Q.*—**Sri K. SATTANATHA KARAYALAR** : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether there is any proposal to construct weavers' colonies in Tirunelveli and Kanyakumari districts; and

(*b*) if so, the places and the number of houses to be built in 1959–60?

The Hon. Sri R. VENKATARAMAN : (*a*) & (*b*) No housing scheme for weavers in the Kanyakumari district has yet been formulated.

As regards Tirunelveli district, two schemes have been approved and are under execution at present. Of the two schemes, the Scheme for the construction of 100 (one hundred) houses for the members of the Kallidaikurichi Weavers' Co-operative Society is expected to be completed by the end of September 1959. In the second Scheme for the renovation of 40 (forty) existing houses of members of the Melapalayam Weavers' Co-operative Society, 7 (seven) houses have so far been repaired and the repairs in the remaining 33 (thirty-three) houses will be completed soon.

Sri K. SATTANATHA KARAYALAR : டை ஹௌசஸ் ஸ்டோர் முதலியவைகளுக்கு கடன் ஏதாவது கொடுத்தது உண்டா ?

The Hon. Sri R. VENKATARAMAN : This relates to housing and I do not have that information.

Sri T. T. DANIEL : May I know on what basis these weavers' colonies are formed?

The Hon. Sri R. VENKATARAMAN : We select more or less one or two colonies where there is a concentration of handloom weavers.

Sri M. C. MUTHUKUMARASWAMY : நெசவாளர்களுக்கு வீடுகள் கட்டப்பட்டிருக்கிறது அல்லவா ? அப்படி திருநெல்வேலியில் கட்டப்பட்டிருப்பது பரீட்சார்த்தமாகக் கட்டப்பட்டிருக்கிறதா அல்லது நிரந்தரமாகக் கட்டப்பட்டிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

The Hon. Sri R. VENKATARAMAN : நமது ராஜ்யத்தின் பூராவிலுமே 1,600 வீடுகள் கைத்தறி நெசவாளர்களுக்குக் கட்டுவதற்கு திட்டம் போட்டு அதில் 1,368 வீடுகள் இப்பொழுது கட்டப்பட்டு வருகின்றன. கனம் அங்கத்தினர் விரும்பினுல் எந்த எந்த ஊர்களில் எத்தனை வீடுகள் கட்டப்பட்டிருக்கிறது என்று சொல்ல முடியும். அதனுல் பரீட்சார்த்தமாகக் கட்டவில்லை என்பதை சொல்லிக்கொள்கிறேன். இது ஒரு உருவான திட்டம் தான்.